திருவேற்காடு நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.N.தட்சணாமூர்த்தி, B.com.,

ந.க.எண்.3983/2024/எப்1 நாள்.25.09.2024

பொருள்:- மனைப்பிரிவு – திருவேற்காடு நகராட்சி – நூம்பல் கிராமம் – சர்வே எண்.80/1E1,1E2&1E3 (Old S.Nos.49Pt & 50Pt)-ல் 6838ச.மீ பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:-

1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடித எண்.L-1/0039/2024, நாள்.04.07.2024.
2. குன்றத்தூர் சார்பதிவாளர் அவர்கள் அலுவலகத்தில் மனுதாரர் தானமாக சாலை இடத்தினை பதிவு செய்த தான பத்திரம் எண்.10546/2024, நாள்.24.06.2024.
3. நகர்மன்ற தீர்மானம் எண்.726 நாள்.13.09.2024.

****

உத்தரவு :-

திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட **நூம்பல்** கிராமம், சர்வே எண்.80/1E1,1E2&1E3 (Old S.Nos.49Pt & 50Pt)-ல் 6838ச.மீ நிலப்பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வேண்டி **M/s.Royal Land & Developers Pvt.Ltd Rep by Thiru.Vikram Kumar Bagmar & 2 others** என்பவரால் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களுக்கு விண்ணப்பம் சமர்ப்பக்கப்பட்டது.

மேற்படி மனுதாரின் விண்ணப்பம் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை 1-ல் காணும் கடிதத்தின் படி அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலை அமைப்பு வரைபடத்தின் படி, சாலை இடத்தினை குன்றத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பார்வை 2-ல் கண்டுள்ளபடி **M/s.Royal Land & Developers Pvt.Ltd Rep by Thiru.Vikram Kumar Bagmar & 2 others** என்பவர் பத்திர பதிவு செய்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு தானமாக ஒப்படைத்துள்ளார். உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களின் உத்திரவில் மனைப்பிரிவிற்கு PPD/LO No.**141/2024,** நாள்.04.07.2024 திட்ட அனுமதி எண்.15858 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பார்வை 3-ல் காணும் நகரமன்ற தீர்மானத்தின் படி மேற்கண்ட குடியிருப்பு மனைகளுக்கு மன்றம் அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

வ.எண்	கட்டண விவரம்	தொகை ரூ	ரசீது எண்/ நாள்
1.	மனைப்பிரிவு கட்டணம்	ரூ.2,00,000/-	0007305/13.09.2024
2.	பொறியியல் பிரிவு குறிப்பின் படி தரம் குறித்து சான்றிதழ் பெற கட்டணம்	ரூ.40,000/-	0007306/13.09.2024
3.	மனை உட்பிரிவு கட்டணம்	ரூ.2,00,000/-	0007307/13.09.2024
4.	ஆய்வு கட்டணம்	ரூ.5,000/-	0007308/13.09.2024
5.	சுற்றுசுவர்	ரூ.3,000/-	0007309/13.09.2024
6.	5 வருட வைப்பு தொகை	ரூ.2,00,000/-	0007310/13.09.2024
7.	கொடி நாள்	ரூ.5,000/-	0007311/13.09.2024
8.	Lumpsum Amount	ரூ.30,000/-	0007312/13.09.2024
9.	காலிமனை வரி	015/018/902320 ரூ.167358/-	0007300/13.09.2024
		015/018/902321 ரூ.102530/-	0007299/13.09.2024
		015/018/902322 ரூ.38057/-	0007301/13.09.2024

நிபந்தனைகள்

1 சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திட்ட அனுமதி எண்.15858, நாள்.04.07.2024-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும்.

2 இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட இடங்களில் எக்காரணத்தை கொண்டும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.

3 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரப்படி மனைகள் பிரித்து மாற்றம் செய்யாமல் விற்பனை செய்தல் வேண்டும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும்.

4 மனைப்பிரிவு தொடர்பான இடத்தில் (புலஎண்ணில்) உரிமை பிரச்சினை வருமேயானால் தாங்களே சிவில் / குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்வு பெற்றுக்கொள்ளவேண்டும். எந்த சூழ்நிலையிலும் நகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் பொறுப்பேற்காது.

5 தவறான ஆவணம் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது பின்னர் தெரியவந்தால் எந்த நேரத்திலும் வழங்கப்பட்ட உத்திரவு இரத்து செய்யப்படும்

6 நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி-2, நாள்.20.10.2022-ன்படி மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்தபின் இவற்றில் எது அதிகாலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/ மனைப்பிரிவு உரிமையாளரைச் சாரும்.

எனவே, மேற்கண்ட இடத்தில் **M/s.Royal Land & Developers Pvt.Ltd Rep by Thiru.Vikram Kumar Bagmar & 2 others** என்பவர் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மேற்காணும் நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

25/9/2024

ஆணையாளர்
திருவேற்காடு நகராட்சி

25/9/24

பெறுநர்:-

M/s.Royal Land & Developers Pvt.Ltd
Rep by Thiru.Vikram Kumar Bagmar & 2 others
எண்.23/6, மேற்கு பிரிவு, கிருஷ்ணம சாலை,
நுங்கம்பாக்கம்,
சென்னை-600 034.

நகல் பணிந்தனுப்படுகிறது:-

உறுப்பினர் - செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை.